# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

***********

**முறையீட்டு மனு எண்.093/2019/பே**
**ஆணை நாள்: 05—09—2019.**

திரு. மு.அரவிந்தராஜ்,
2—சி, அன்னூார் ரோடு,
பெரியகாடு,கருகம்பாளையம்,
சோமனூர்,
திருப்பூர் மாவட்டம்—**641668.** — **முறையீட்டு மனுதாரர்.**

செயல் அலுவலர்,
சாமளாபுரம் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம். — **எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

திருப்பூர் மாவட்டம், சோமனூர், கருகம்பாளையம், அன்னூர் ரோடு, எண்.2—சி, என்ற முகவரியில் வசிக்கும் திரு.மு.அரவிந்தராஜ், என்பவரின் 03.06.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.06.2019 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு.93/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் முறையீட்டு மனுதாரரின் தகப்பனார் திரு.சு.முருகசாமி மற்றும் தனது பெரியப்பா திரு.சு.பழனிச்சாமி என்பவருக்கும் இடையே நடைபெற்று வந்த சொத்து தொடர்பான வழக்கு முடிவடைந்து, தனது பெரியப்பா தனது பங்கு சொத்துக்கள் முழுவதையும் விற்று விட்டதாகவும், இதனால் ஏற்கனவே தனது தந்தையார் மற்றும் தனது பெரியப்பா பெயர்களில் இருந்த கூட்டு வரி விதிப்பில் இருந்து தனது பெரியப்பா பெயரை நீக்கம் செய்து தரவேண்டி திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சிக்கு மனு செய்ததாகவும், பேரூராட்சி அலுவலர்கள் நீக்கம் என்பதற்கு பதிலாக பெயர் மாற்றம் என்று வேறு மனு கொடுக்கச் சொன்னதாகவும் அதன்படி தான் மனு அளித்தும், அதில் கால தாமதம் செய்து தன்னால் கொடுக்கப்பட்ட வரைபட ஆவணத்தினை மறைத்து மீண்டும் கொடுக்கச் சொன்னதாகவும், அவ்வாறு மீண்டும் ஆவணங்கள் அளித்தும் காலதாமதம் செய்ததால், ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு மனு செய்ததாகவும் அதிலும் தீர்வு காணப்படாததால் தனது கோரிக்கையினை நிறைவேற்றக் கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி பொருள் தொடர்பாக திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் 02.07.2019 நாளிட்ட விளக்க அறிக்கையில் சாமளாபுரம் பேரூராட்சி, வார்டு எண்.13 கருகம்பாளையம், அன்னூர் ரோடு கதவு எண்.2—ன் சொத்து வரி மற்றும் குடிநீர் இணைப்புகள் அனைத்தும் திரு.முருகசாமி மற்றும் அவ்ரது சகோதரர் பெயரில் கூட்டாக இருந்ததை, இருவரும் பல்லடம் முன்சீப் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து பாகப்பிரிவினை செய்துள்ளதாகவும், தற்போது முறையீட்டு மனுதாரரின் பாகத்திற்கு வரப்பட்ட பாகத்தின் சொத்து வரி மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு வரியினை தங்களது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மனு செய்ததின் பேரில், மேற்படி மனு நடவடிக்கைக்காக பல்லடம் அரசு வழக்கறிஞரின் சட்ட

ஆலோசனை பெறுவதற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டமைக்கு, அரசு வழக்கறிஞரால் சில ஆவணங்கள் கோரப்பட்டதாகவும், இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரின் பெரியப்பா திரு.பழனிச்சாமி தனது 03.06.2019 நாளிட்ட கடிதத்தில் தனது பங்கிற்குள் வந்த கட்டிடத்தினை முழுமையாக இடித்து விட்டும், அதனை விற்று விட்டதாகவும் தெரிவித்து சொத்து வரி விதிப்பினை தனது சகோதரர் பெயருக்கு மாற்ற ஆட்சேபணை ஏதும் இல்லை என தெரிவித்துள்ளதாகவும், மேற்படி இடத்திற்குண்டான பத்திர நகல் மற்றும் இதர ஆவணங்களை 24.06.2019அன்று சமர்ப்பிக்க கோரப்பட்டதில் முறையீட்டு மனுதாரர் மற்றும் அவரது பெரியப்பா ஆகியோர் நாளது தேதி வரை எந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

08.07.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 22.08.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் சாமளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட விளைநில பூமியில் தனது தந்தைக்கு 54 சென்ட் நிலமும், தனது பெரியப்பாவிற்கு 39.5 சென்ட் நிலமும் பாகப்பிரிவினை மூலம் உறுதி செய்யப்பட்டதாகவும், ஆகமொத்தம் 93 சென்ட் நிலத்திற்கு கூட்டுப்பட்டாவாக தனது தந்தை மற்றும் தனது பெரியப்பா பெயரில் இருந்ததாகவும், தற்போது நீதி மன்றம் மூலம் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தனது தந்தைக்கு பிரிக்கப்பட்ட பாகத்திற்கு நான்கு எல்லை குறிப்பிட்டு பாகம் செய்யப்பட்டதாகவும், தனது பெரியப்பா பகுதி விற்பனை செய்யப்பட்டு, வீடும் இடிக்கப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். தங்கள் பங்கிற்கு உள்ள வீட்டிற்கு தனது தந்தை பெயரில் வரி விதிப்பு செய்ய மனு செய்ததாகவும், 18.08.2017 அன்று ஏற்கனவே தனது தந்தை பெயருக்கு கூட்டு உரிமைதாரராக இருந்தபோதே தனது தந்தையார் பெயரில் குடிநீர் கட்டணம் வசூல் செய்துள்ளதாகவும், நாளது தேதி வரை தனது தந்தையாரின் பெயரிலேயே குடிநீர் கட்டணம் செலுத்தி வருவதாகவும், இந்நிலையில் தனது தந்தையின் பெயரினை பதிவு செய்து தனது பெரியப்பா பெயரினை நீக்கி தனது தந்தையின் பெயரில் சொத்து வரி விதிப்பு செய்யுமாறு கேட்டுக் கொண்டதாகவும், தனது தந்தை மற்றும் தனது பெரியப்பா பெயரில் உள்ள இடத்திற்கும் தனது தந்தையே வரி செலுத்தி வந்ததாகவும், தான் மேற்படி வரி விதிப்பு பெயர் மாற்றம் செய்ய மனு அளித்த பின்னர் இரண்டு மாதம் கடந்து, மேற்படி பெயர் மாற்றம் செய்ய இயலாது எனவும், இது குறித்து சட்ட ஆலோசனை பெறவேண்டும் என தெரிவிக்கப்பட்டதாகவும், தற்போது இருக்கும் செயல் அலுவலரே அப்போதும் பணியில் இருந்ததாகவும், அவரால் கோரப்பட்ட ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பித்ததாகவும், முதலில் உட்பிரிவு செய்யப்பட்ட வரைபடத்தை கோரியமைக்கு அதனையும் சமர்ப்பித்துள்ளதாகவும், முதலில் கேட்ட ஆவணங்களையே மீண்டும் கேட்டதால் அதனையும் சமர்ப்பித்ததாகவும், மேற்படி ஆவணங்களுக்கு ஒப்புதல் கோரப்பட்டமைக்கு ஒரு பெண் உதவியாளர் ஆவணங்களுக்கான ஒப்புதல் தேவையா அல்லது வரி விதிப்பு பெயர் மாற்றம் வேண்டுமா என கேட்டதாகவும், தான் வரி விதிப்பு மட்டும் செய்யப்பட வேண்டும் என ஓராண்டுக்கு முன்னர் தெரிவித்து அதனுடன் நிறுத்திக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். குடிநீர் வரி மட்டும் தொடர்ந்து செலுத்தி வருவதாகவும், ஏற்கனவே தனது தந்தையின் பெயரில் இருந்த குடிநீர் வரி விதிப்பு தற்போது அந்த பெயரினை மாற்றி புதிய திட்டத்தில் வந்த இணைப்பினை தனது தந்தை பெயருக்கு கொடுக்காமல் தனது தந்தை மற்றும் தனது பெரியப்பா பெயரிலேயே கொடுத்துள்ளதாகவும் தான் ஒரு பொது நல விஷயமாக 3 மனுக்களை அளித்துள்ளதாகவும் அதனைக் கருத்தில் கொண்டு தனக்கு செய்யவேண்டிய பெயர் மாற்றத்தினை செய்யாமல் தன்னை அலைய விடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

நீர் நிலை மற்றும் மந்தை மேய்க்கால் புறம்போக்கு, கால்நடைக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தில் பலர் வீடு கட்டியுள்ளதாகவும் தற்போது புதிதாக வீடு கட்டியுள்ளவர்களுக்கு வரிவிதிப்பு செய்வதை வரி விதிப்பு செய்யவேண்டாமென கேட்டுக் கொண்டதாகவும், ஆனால் தொடர்ந்து அதை மீறி வரி விதிப்பு செய்துள்ளதாகவும், மேற்கண்டவாறான தவறான வரி விதிப்பினை பேரூராட்சி தலைமை எழுத்தர்தான் செய்வதாகவும், தலைமை எழுத்தரும் செயல் அலுவலரும் கூட்டாக செயல்படுவதாகவும், மீண்டும் மீண்டும் அதே தவறினை செய்வதாகவும், தான் இவற்றையெல்லாம் கேட்டதால் துப்புரவுத் தொழிலாளர்களை தான் சாதியின் பெயரினை சொல்லி திட்டியதாக பேரூராட்சி இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதி தன் மீது காவல் துறையில் புகார் கொடுக்க அனுமதி கேட்டுள்ளதாகவும், தனக்கு பணிபுரிபவர்களின் ஜாதி பெயரெல்லாம் தெரியாது எனவும், பேரூராட்சியில் பணிபுரியும் ஆதி திராவிட பிரிவினைச் சார்ந்த பணியாளர் (துப்புரவு பணியாளர்) ஒருவரை வைத்து இதையெல்லாம் செய்வதாகவும், பொதுமக்களின் நலனுக்காக ஒரு விளையாட்டு மையம் அமைக்க பேரூராட்சியினை தான் கோரியதாகவும், அதனையும் செய்யவில்லை எனவும், கழிவு நீரை ஆற்றிலும், குளத்திலும், நீர் நிலைகளிலும் கலக்க விடவேண்டாம் எனவும் அவற்றை முறைப்படி குடிநீர் ஆதாரங்கள் பாதிக்கப்படாமல் முறைப்படுத்த கோரியதாகவும் தனது முறையீடுகள் குறித்து தக்க ஆணைபிறப்பிக்குமாறும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

08.07.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 22.08.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.ரா.பாலசுப்பிரமணி தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரரின் மனு 03.06.2019 கிடைக்கப்பெற்றதாகவும் அதில் குறிப்பிட்டுள்ள விவரங்களை ஆய்வு செய்து வரி விதிப்பு பெயர் மாற்றத்தினை மேற்கொண்டு தனது அறிக்கையினை இரு தினங்களுக்குள் சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் 28.08.2019 நாளிட்ட அறிக்கையில் மேற்படி பேரூராட்சிக்குட்பட்ட கருகம்பாளையம் அன்னூர் ரோடு வீதியில் கதவு எண்.2–சியில் வசித்து வரும் திரு.சி.அரவிந்தராஜ் த/பெ திரு.முருகசாமி என்பவர் தனது தந்தையின் பெயரில் வரி விதிப்பினை பெயர் மாற்றம் செய்து தரக் கோரியது தொடர்பான மனுதாரரின் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து அதன்படி மனுதாரருக்கு சொத்து வரி விதிப்பு எண்.4923 மற்றும் குடிநீர் வரி விதிப்பு எண். 10691 என திரு.முருகசாமி என்பவரின் பெயருக்கு சாமளாபுரம் பேரூராட்சி உத்திரவு ந.க.எண். 387/2019, நாள் 26.08.2019ன் படி மாற்றம் செய்யப்பட்டதாக தெரிவித்து அதற்கான ஆணையின் நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் 28.08.2019 நாளிட்ட அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையான அவரது தந்தையின் பெயரில் சொத்து வரி மற்றும் குடிநீர் வரி விதிப்புகள் பேரூராட்சியால் இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகளுக்குப் பின்னர் உரிய மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டுள்ள நிலையில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுவிட்டதாக கருதி இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையை கைவிட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 05 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

செயலாளர்

பெறுநர்
1.திரு. சி.அரவிந்தராஜ்,
2–சி, அன்னூர் ரோடு,
பெரியகாடு,கருகம்பாளையம்,
சோமனூர்,
திருப்பூர் மாவட்டம்–641668.
2.செயல் அலுவலர்,
சாமளாபுரம் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்) தகவலுக்காக.